வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண்.2040/ஆ1/2024 நாள்:30.05.2024.

பொருள் : வேலூர் மாவட்டம் – மேல்நிலைக் கல்வி – 01.01.2024இல் உள்ளவாறு அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலை பாட ஆசிரியர்கள்/முதுகலை மொழி ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர் நிலை –1/ – தேர்ந்தோர் பட்டியல் – தயார் செய்யக் கருத்துருக்கள் கோருதல் – சார்பாக

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.14, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை நாள்.30.01.2020
2. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை நாள்.17.12.2021
3. W.P.No.17632/2022 etc. தொகுப்பு வழக்குகளின் மீதான நீதிமன்ற தீர்ப்பாணை நாள்.29.08.2022
4. C.P.(Civil) Diary No(s).6415/2021 INSLP(c)No.2886/2016 தீர்ப்பாணை நாள்.18.04.2023
5. சென்னை, ஆசிரியர் தேர்வு வாரியம் தலைவருக்காக ந.க.எண்.4965141 /CV3-S2 /2023 நாள்.13.05.2024
6. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.26054/டபிள்யு1/இ1/2024 நாள்.24.05.2024

---

பார்வை 6இல் காணும் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டம், அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு 01.01.2024 நிலவரப்படியான கீழ்க்காண் விவரங்கள் கோரப்படுகிறது.

<u>முதுகலை ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்</u>

1. 2003–2004ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்து 01.06.2006 முதல் பணிவரன்முறை செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களில் 01.01.2023 நிலவரப்படியான முன்னுரிமை பட்டியலில் இடம் பெற்ற பதவி உயர்வு பெற்றவர்கள் போக எஞ்சியுள்ள முதுகலை ஆசிரியர்கள் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
2. 2004–2005 ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட்டு 01.06.2006 முதல் பணிவரன் முறை செய்யப்பட்ட முதுகலைப் பாட ஆசிரியர்கள்/முதுகலை மொழி ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர் (நிலை –1) ஆகியோரின் தெரிவுப்பட்டியல் மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்தவர்களை மதிப்பெண் அடிப்படையில் சரிபார்த்து முன்னுரிமைப்படி அனுப்ப வேண்டும். (உச்சநீதிமன்ற தீர்ப்பாணையின்படி போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தர எண் நிர்ணயித்து முதுகலை ஆசிரியர்கள்அனைவருக்கும் 2004 –2005ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை தலைமையாசிரியர்கள் பின்பற்றிடல் வேண்டும்)
3. கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் விவரம்

4. முந்தைய ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெறாமல் 01.01.2024 அன்றைய நிலவரப்படி தயார் செய்யப்பட்டு தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள்
5. ஏற்கனவே, அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் பதவி உயர்வு வழங்கப்பட்டு, 2020இல் தற்காலிக உரிமைவிடல் செய்து முழு மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 Panel Years) நிறைவு செய்துள்ள முதுகலை ஆசிரியர்கள்.

மேலும் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு Tamilnadu Government Gazette Part III Section 1(b) date.30.01.2020இல் அரசாணை நிலை எண்.14 பள்ளிக்கல்வி (பக2(1) நாள்.30.01.2020இல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

1. Tamil Nadu Government Office Manual Test
2. Account test for Executive Officers (or) Account test for Subordinate Officers part I
3. Tamil Nadu School Education Department Administrative test paper –1 and Paper – II

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுற்கு பரிந்துரைக்ககூடாது.

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்கக்கூடாது.

மேற்கண்ட விவரங்களை சென்ற ஆண்டு தயார் செய்து அனுப்பப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு தகுதியுடைய முதுகலை ஆசிரியர்களின் விவரங்களை பூர்த்தி செய்து கவனத்துடன் செயல்பட்டு ஆய்வு செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் ஏற்படின் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களே முழுபொறுப்பு ஏற்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 05.06.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலக "ஆ1" பிரிவில் பணிப்பதிவேட்டுடன் ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.

1. முதுகலை ஆசிரியரின் விவரங்கள் சார்ந்த படிவம்
2. 2004 –2005இல் தெரிவுப்பட்டியல் போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெறப்பட்டது.
3. 01.01.2023 நிலவரப்படி எஞ்சியுள்ள முதுகலை ஆசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியல்

31/5/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

30/5/24

பெறுநர்,
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர்.